செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழல் சிந்தனைகள் – மரபும் நீட்சியும்

(வானியல், நிலவியல், பொழுது மற்றும் சூழலியல்)

பயிலரங்கம் – 9

(25.06.2024 – 04.07.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

**அன்புடையீர், வணக்கம்.**

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானதை இயற்கையிடமிருந்துதான் பெற்று வந்தான். இயற்கையோடு கலந்த மனித வாழ்வின் மேன்மைக்கு இயற்கை அளித்தக் கொடை ஏராளமாகும். இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் தனது ஆளுகையின்கீழ் கொண்டிருக்கும் இயற்கையின் இயக்கங்களும் போக்குகளும் சொல்லில் வடிக்கும் திறமாமோ?. இயற்கையில் நிகழும் அற்புதங்கள் இன்றும் புரியாதப் புதிராகத்தான் உள்ளது. இயற்கை சார்ந்த பாடு (உழைப்பு) என்பதுதான் தமிழரின் வாழ்வியல் மற்றும் பண்பாடு ஆகும். இவற்றிற்கெல்லாம் அடிப்படைச் சான்றாகத் திகழ்பவை தமிழ் இலக்கியங்கள், குறிப்பாகச் செம்மொழித் தமிழ் இலக்கியங்கள். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் புலவர்களும் புரவலர்களும் இந்த ஐம்பூதத்து இயற்கையின் அமைப்புகளை, இயக்கங்களை, செயல்பாடுகளை, அவை சார்ந்த சிந்தனைகளை அறிவியல் நுட்பத்தோடு, ஐவகைத் திணைசார் அறிவுத் திறத்தோடு உணர்ந்து நேர்த்தியாகச் செய்யுள் செய்திருப்பது கற்போரை வியப்பில் ஆழ்த்தும்.

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்,”** என்னும் தொல்காப்பியப் பதிவு இயற்கைச் சிந்தனையின் ஆகச் சிறந்த தொடக்கமாகும். தொடர்ந்து,

**“மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை,”**

என வரும் புறநானூற்றுப் பாடல் தமிழரின் இயற்கை சார் சிந்தனையின் உச்சகட்டம் ஆகும்.

**“வானம் கடல் நீரை முகர்ந்து மழையாகப் பொழிகின்றது, ”** என்ற பின்னாளைய அறிவியல் கண்டுபிடிப்பை முன்னாளிலேயே கண்டு பாடலாக்கம் செய்துள்ளது பட்டினப்பாலை. நிலம் பூத்து மலர்ந்த மூதின்முல்லை தமிழர் மரபில் கற்பிற்கு அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது.

இயற்கையைத் தெய்வமாகப் போற்றிப் பாடும் மரபு,

**“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்”**
**“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்”**
**“மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்,”**

என்று சிலப்பதிகாரத்தில் மட்டுமல்லாது சமகாலம்வரை தொட்டுத் தொடர்கின்றது.

**‘‘நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை,”** என மழையையும் மாந்தர் குணத்தையும் ஒப்பிடுகின்றது மூதுரை.

இயற்கைப் பொருள்களான வானம், சூரியன், திங்கள், விண்மீன், முகில், மலை, காற்று, நெருப்பு, நீர் ஆதாரங்கள், மரம் போன்றவற்றையும் பருவகாலங்கள், காலக்கணிப்புகள், பொழுதுகளையும் வழிபாட்டிற்கு உரியனவாகப் பண்டைய இலக்கியங்கள் உணர்த்தியுள்ளன. இயற்கை சார்ந்த அறிவியல் சிந்தனையில் தமிழர்கள் உச்சம் தொட்டவர்கள், சூழலியல் போக்குகளைத் துல்லியமாகக் கணிக்கும் மரபு அறிவு கைவரப்பெற்றவர்கள் என்பதற்கான சான்றுகள் தமிழ்ச் செம்மொழி இலக்கியவெளி எங்கும் செழுமையாக விரவிக்கிடக்கின்றன.

தமிழ் இலக்கிய மரபில் பதிவேற்றப்பட்டுள்ள மேற்கண்ட இயற்கை சார்ந்த சிந்தனைகளை, மரபுகளை அவற்றின் சமகால நீட்சிப் போக்குகளை வகைதொகைப்படுத்தி

ஆராய்ந்து வெளிக்கொணரும் வகையில் “**செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழல் சிந்தனைகள்,**” என்னும் பொருண்மையில் பயிலரங்கு (பத்து நாள்கள்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் ஆய்வு நிறைஞர்கள் / முனைவர் பட்ட ஆய்வாளர்கள் இந்தப் பயிலரங்கில் பங்குகொண்டு பயன்பெறலாம்.

இப்பயிலரங்கில் துறை சார்ந்த அறிஞர்கள், வல்லுநர்கள் ஆய்வுரை வழங்க உள்ளனர்.

தமிழியல் ஆய்வுக் களத்தை, தமிழரின் சிந்தனை மரபை வெளிப்படுத்தி, வளப்படுத்தும் ஆய்வு நோக்கில் நடைபெறும் இந்தப் பயிலரங்கில் பங்கேற்க ஆர்வலர்களை அழைக்கின்றோம்.

## பயிலரங்கின் விதிமுறைகள், விவரங்கள்.

1. பயிலரங்கில் பங்குபெற அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை: 40.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 25.06.2024 முதல் 04.07.2024 வரை. நேரம்: காலை10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
3. பயிலரங்கக் கட்டணம் இல்லை.
4. நண்பகல் உணவு, தேநீர், பயணப்படி, நாட்படி செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படிப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும்.
5. பயிலரங்கில் பங்கேற்க ஆர்வமுள்ளோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
6. இணையவழி விண்ணப்பம் https://forms.gle/v5fmJxgk7zpV8iNg7 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகப் பெறலாம்.

7. விண்ணப்பம் வந்துசேர இறுதிநாள் : 14.06.2024

8. பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 18.06.2024 நாளன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

9. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளை அவசியம் கடைப்பிடித்தல் வேண்டும்.

இயக்குநர்